# ***DEPOSITION OF WITNESS***
# IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, THANJAVUR AT KUMBAKONAM

## CC No. 311/2020

**PW: 4**

| | | | |
|---|---|---|---|
| Name : | திரு.ஆறுமுகம் | Taluk : | கும்பகோணம் |
| Father's Name : | திரு.மாயவன் | Calling : | LW7 |
| Village : | கக்கன் காலனி, கும்பகோணம் | Age : | 61 |

Solemnly affirmed by Thiru.X.Gilbert Maria Julian, Bench Clerk Grade II in accordance with the provisions of The Oaths Act, 1969 (Act 44 of 1969) on the 22nd day of June 2026.

Signature of Witness.

(Accused present. Assistant Public Prosecutor Grade II Present. Defence counsel present)

முதல் விசாரணை :

நான் கும்பகோணம் கக்கன் காலனியில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்து போன ஆலப்பன் எனது தெருக்காரர் ஆவார். 02.07.2019 அன்று இரவு சுமார் 10.00 மணியளவில் நான் வீட்டிலிருந்தபோது என் தெருவை சேர்ந்த நபர் எனக்கு போன் செய்து ஆலப்பன் என்பவருக்கு செக்காங்கன்னி மற்றும் நால்ரோடு செல்லும் சாலையில் லெட்சுமி பேருந்து மோதிவிட்டதாக கூறினார். நான் உடனே தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது அவருக்கு சிகிச்சை அளித்து

கொண்டிருந்தார்கள். அவர் மறுநாள் காலை 7.45 மணியளவில் இறந்து விட்டார். பின்னர் தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனை சவக்கிடங்கில் வைக்கப்பட்டிருந்த ஆலப்பனின் பிரேதத்தின் மீது போலீசார் பிரேத விசாரணை செய்தார்கள். நான் உடனிருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> :

வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார்.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by her to be Correct.*

*Sd/S.Mahalakshmi,*
*Chief Judicial Magistrate,*
*Thanjavur at Kumbakonam.*